# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093850

1. District மாவட்டம் : திருப்பூர் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 2/AC/2020 Date: நாள் 14.02.2020

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Central Act 16/2018) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 07.02.2020ம் தேதி காலை 10.00 மணி 12.02.2020ம் தேதி காலை 11.00 மணி
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2020 Time : நேரம் 06.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ வாய்மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் உதவி மின்பொறியாளர் அலுவலகம், இயக்குதல் பராமரிப்பும், [illegible], திருப்பூர் மாவட்டம். [illegible] 15 கி.மீ தொலைவு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. P. ராசு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் [illegible] (லேட்)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 34 வயது (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வியாபாரம் (g) Address : முகவரி [illegible] கிராமம், [illegible], [illegible] வட்டம், திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. சுகன்யா, உதவி மின்பொறியாளர் 2) திரு. [illegible], வணிக ஆய்வாளர் உதவி மின்பொறியாளர் அலுவலகம், இயக்குதல் பராமரிப்பும் [illegible], திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   புகார்தாரரால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........–........ Rank ........–........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........–........ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........–........ பதவி ........–........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........–........ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/2/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

14/2/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

GV. KIRUSHNAA RAAJAN

Name: பெயர் ..............................

Rank: நிலை .................... No. எண் ..........

Dy. Supdt. of Police
Krishnagiri V&AC,
FAC, Dharmapuri V&AC.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14.02.2020 at 10.20 Hrs.

S 16(CL-12)p.2

14/02/2020
SI, VAC, Dharmapuri.

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/AC/2020, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in amended 2018 (Central Act 16 of 2018) வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி .

******

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் அஞ்சல், நடப்பனஅள்ளி கிராமத்தை சேர்ந்த பெரியமுத்து மகன் திரு.P.மாது என்பவர் இன்று 14.02.2020 ம் தேதி காலை 06.00 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் துணை கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி பொறுப்பு தருமபுரிஅவர்கள் முன்னிலையில் கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு:-

நான் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நடப்பனஅள்ளி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 6-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்கத் தெரியும், ஆனால் சரியாக எழுத வராது. என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 5 ஆண்களும், 2 பெண்களும் உள்ளனர். எனது அப்பா பெரியமுத்து கடந்த 02.02.2014 ம் தேதி இறந்துவிட்டார். எனது அம்மா பெயர் முனியம்மாள். நல்லம்பள்ளி வட்டம், கும்பலபாடி கிராம சர்வே எண்.12/1 ல் எனது அப்பா பெயரில் 2 ஏக்கர் விவசாய நிலமும், அதில் ஒரு வீடும், ஒரு கிணறும் உள்ளன. அந்த கிணற்றில் ஆயில் மோட்டார் வைத்து எங்க அண்ணன், தம்பிகள் அனைவரும் கூட்டாக சேர்ந்து விவசாயம் செய்து வருகிறோம். நான் விவசாய வேலை செய்து கொண்டும், டிராக்டர் டோஷர் டிரைவராகவும் வேலை செய்து வருகிறேன். எங்களது விவசாய நிலத்தில் உள்ள வீட்டிற்கு கடந்த சுமார் 1 மாதத்திற்கு முன்பு நான் இண்டூர் மின் அலுவலகத்திலிருந்து மின் இணைப்பு பெற்றேன். எங்கள் நிலத்தில் உள்ள கிணற்றிற்கு 1.5 HP-ல் சிங்கள் பேஸில் பூந்தோட்ட E.B சர்வீஸ் கனெக்ஷன் வாங்கலாம் என முடிவு செய்து என்னுடன் பிறந்தவர்கள் மற்றும் எனது அம்மா சம்மதத்துடன், எனது பெயரில் கடந்த 07.02.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு இண்டூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று C.I முனுசாமி அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்து, பூந்தோட்ட மின்இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அவர் அந்த விண்ணப்பத்தை வாங்கி அதை சரிப்பார்த்துவிட்டு, உனது விண்ணப்பத்தை இணைய

தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதன் பின்னர்தான் சர்வீஸ் கனெக்சன் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று சொன்னார். அதற்கு பின்பு C.I முனுசாமி அவர்கள் மீட்டருக்கு பணம் கட்ட வேண்டும் என்று சொல்லி என்னிடம் ரூ.4000/–த்தை அன்றே கேட்டு வாங்கி கொண்டார். அதற்கு இரசீது தாருங்கள் சார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர் இரசீது இப்போது தரமுடியாது 10 அல்லது 15 நாட்கள் கழித்துதான் தரமுடியும் என்று சொன்னார். அதன்பின்பு, என்னிடம் அவர், தனக்கு தனியாக ரூ.2000/–மும், AE-க்கு தனியாக ரூ.3000/–மும், ஆக மொத்தம் ரூ.5000/ கொடுத்தால்தான் உனது விண்ணப்பம் ஆன்லைனில் பதிவேற்றம் செய்து சர்வீஸ் கனெக்சன் கொடுக்க என்னால் ஏற்பாடு மேற்கொள்ள முடியும் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடமில்லை, நான் ரொம்ப கஷ்டத்தில் இருக்கேன் என்று சொன்னதற்கு, பணம் தாராமல் உனது வேலையாகாது என்று சொன்னார். உனக்கு சந்தேகம் இருந்தால் நீயே போய் AE மேடத்தை சந்தித்து இது சம்மந்தமாக கேட்டு தெரிந்து கொள். ஏனென்றால் அவர்தான் உனது வேல்லையை செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அன்று AE மேடம் இல்லாததால் அவரை நான் பார்க்க முடியவில்லை. அதன் பின்னர், 12.02.2020 –ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நான் இண்டூர் E.B ஆபிசுக்கு சென்று மீண்டும் CI முனுசாமி அவர்களை சந்தித்து எனது விண்ணப்பம் குறித்து கேட்டபோது, அவர் தான் கேட்ட பணம் ரூ.2000/–த்தை தனக்கு கொடுத்தால்தான் எனது வேலையாகுமென்றும், AE மேடத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்தை பற்றி நீ அவரிடமே நேரடியாக பேசிக்கொள் என்றும் சொன்னார். அதன்படி, நான் AE அகல்யா என்பவரை அவருடைய அறையில் சந்தித்து எனது கிணற்றிற்கு பூந்தோட்ட E.B சர்வீஸ் கனெக்சன் வாங்குவது தொடர்பாக எனது அப்ளிகேசன் மீது உரிய நடவடிக்கை எடுக்க CI முனுசாமி என்னிடம் பணம் ரூ.5000/– கேட்கிறார் என்றும், அதில் ரூ.2000/– அவருக்கும், ரூ.3000/– உங்களுக்கும் தனியாக கொடுக்கவேண்டும் என்றும் சொல்கிறார், என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது. நீங்கள்தான் எனக்கு உதவி செய்யவேண்டும் என்று கெஞ்சிக்கேட்டேன். அதற்கு அவர் நீ ஏற்கனவே வீட்டு சர்வீஸ் வாங்கியதற்கு எனக்கு தனியாக எந்த பணமும் தரவில்லை. அதனால் இந்த முறை அதற்காகவும், பூந்தோட்ட சர்வீஸ் கனெக்சன் கொடுக்க ஏற்பாடு செய்யவும், எனக்கு மட்டும் தனியாக ரூ.5000/– தரவேண்டும். CI முனுசாமி அவருக்காக தனியாக கேட்ட பணத்தை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மட்டும் தனியாக நீ ரூ.5000/– தர வேண்டும், இல்லையென்றால்

உனது வேலையாகாது என்று அவரும் முடிவாக சொல்லிவிட்டார். மீண்டும் நான் CI முனுசாமியிடம் வந்து இது பற்றி சொன்னபோது என்னை நம்பாம போனயே, அதனால நீ எனக்கு தரவேண்டிய பணம் ரூ.2000/- த்தை எடுத்து கொண்டு வருகின்ற வெள்ளிக்கிழமை எனக்கு தனியாக கொடுத்துவிடு. AE மேடத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்தை நீயே அவருக்கு கொடுத்துவிடு என்று அவரும் முடிவாக சொல்லிவிட்டார். என்னுடைய கஷ்டத்தை நான் எவ்வளவோ எடுத்து சொல்லியும் CI முனுசாமியும், AE அகல்யாவும் கொஞ்சம்கூட கருணை காட்டவில்லை. அவர்கள் இருவருக்கும் இலஞ்சமாக பணம் கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7,000/- ஐ என்னால் உடனடியாக ரெடிபண்ண முடியவில்லை. இன்றுதான் ஏற்பாடு செய்ய முடிந்தது. அதனால் அவர்கள் இருவரும் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் மொத்தம் ரூ.7,000/-த்துடன் இன்று இண்டூர் E.B ஆபிஸ் சென்று அவர்களை சந்திக்க உள்ளேன். ஆகவே என்னிடம் இலஞ்சமாக பணம் கேட்ட AE அகல்யா மற்றும் CI முனுசாமி ஆகியோர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம். P.மாது Sir, The oral statement of the informant was recorded by me in the office computer on 14.02.2020 between 06.00 hrs and 07.00 hrs and read it over to him which is admitted to be correct. Further, a confidential verification on the general reputation of the both accused and whether the informant has motive with them personally was verified and found that the reputation of both accused are learnt to be not good and nothing adverse against the informant and the information given in his statement is genuine. Therefore, a case in Dharmapuri Cr.No. 02/AC/2020, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 (Central Act 16 of 2018) was registered today 14.02.2020 at 08.30 hrs against both accused. The original FIR and the statement of the informant is sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

14/2/2020

(GV.Kirushnaa Raajan)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Krishnagiri,
FAC Dharmapuri

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் அஞ்சல், நடப்பனஅள்ளி கிராமத்தை சேர்ந்த பெரியமுத்து மகன் திரு.P.மாது என்பவர் இன்று 14.02.2020 ம் தேதி காலை 06.00 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி காவல் துணை கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி பொறுப்பு தருமபுரிஅவர்கள் முன்னிலையில் கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு.

---

நான் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நடப்பனஅள்ளி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 6–ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். படிக்கத் தெரியும், ஆனால் சரியாக எழுத வராது. என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 5 ஆண்களும், 2 பெண்களும் உள்ளனர். எனது அப்பா பெரியமுத்து கடந்த 02.02.2014 ம் தேதி இறந்துவிட்டார். எனது அம்மா பெயர் முனியம்மாள். நல்லம்பள்ளி வட்டம், கும்பலபாடி கிராம சர்வே எண்.12/1 ல் எனது அப்பா பெயரில் 2 ஏக்கர் விவசாய நிலமும், அதில் ஒரு வீடும், ஒரு கிணறும் உள்ளன. அந்த கிணற்றில் ஆயில் மோட்டார் வைத்து எங்க அண்ணன், தம்பிகள் அனைவரும் கூட்டாக சேர்ந்து விவசாயம் செய்து வருகிறோம். நான் விவசாய வேலை செய்து கொண்டும், டிராக்டர் டோஷர் டிரைவராகவும் வேலை செய்து வருகிறேன். எங்களது விவசாய நிலத்தில் உள்ள வீட்டிற்கு கடந்த சுமார் 1 மாதத்திற்கு முன்பு நான் இண்டூர் மின் அலுவலகத்திலிருந்து மின் இணைப்பு பெற்றேன். எங்கள் நிலத்தில் உள்ள கிணற்றிற்கு 1.5 HP-ல் சிங்கள் பேஸில் பூந்தோட்ட E.B சர்வீஸ் கனெக்ஷன் வாங்கலாம் என முடிவு செய்து என்னுடன் பிறந்தவர்கள் மற்றும் எனது அம்மா சம்மதத்துடன், எனது பெயரில் கடந்த 07.02.2020 ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு இண்டூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று C.I முனுசாமி அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்து, பூந்தோட்ட மின்இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அவர் அந்த விண்ணப்பத்தை வாங்கி அதை சரிப்பார்த்துவிட்டு, உனது விண்ணப்பத்தை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதன் பின்னர்தான் சர்வீஸ் கனெக்சன் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று சொன்னார். அதற்கு பின்பு C.I முனுசாமி அவர்கள் மீட்டருக்கு பணம் கட்ட வேண்டும் என்று சொல்லி என்னிடம் ரூ.4000/–த்தை அன்றே கேட்டு வாங்கி கொண்டார். அதற்கு இரசீது தாருங்கள் சார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர் இரசீது இப்போது தரமுடியாது 10 அல்லது 15 நாட்கள் கழித்துதான் தரமுடியும் என்று சொன்னார். அதன்பின்பு, என்னிடம் அவர், தனக்கு

தனியாக ரூ.2000/–மும், AE-க்கு தனியாக ரூ.3000/–மும், ஆக மொத்தம் ரூ.5000/ கொடுத்தால்தான் உனது விண்ணப்பம் ஆன்லைனில் பதிவேற்றம் செய்து சர்வீஸ் கனெக்சன் கொடுக்க என்னால் ஏற்பாடு மேற்கொள்ள முடியும் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடமில்லை, நான் ரொம்ப கஷ்டத்தில் இருக்கேன் என்று சொன்னதற்கு, பணம் தராமல் உனது வேலையாகாது என்று சொன்னார். உனக்கு சந்தேகம் இருந்தால் நீயே போய் AE மேடத்தை சந்தித்து இது சம்மந்தமாக கேட்டு தெரிந்து கொள். ஏனென்றால் அவர்தான் உனது வேலையை செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அன்று AE மேடம் இல்லாததால் அவரை நான் பார்க்க முடியவில்லை. அதன் பின்னர், 12.02.2020 –ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நான் இண்டூர் E.B ஆபிசுக்கு சென்று மீண்டும் CI முனுசாமி அவர்களை சந்தித்து எனது விண்ணப்பம் குறித்து கேட்டபோது, அவர் தான் கேட்ட பணம் ரூ.2000/–த்தை தனக்கு கொடுத்தால்தான் எனது வேலையாகுமென்றும், AE மேடத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்தை பற்றி நீ அவரிடமே நேரடியாக பேசிக்கொள் என்றும் சொன்னார். அதன்படி, நான் AE அகல்யா என்பவரை அவருடைய அறையில் சந்தித்து எனது கிணற்றிற்கு பூந்தோட்ட E.B சர்வீஸ் கனெக்சன் வாங்குவது தொடர்பாக எனது அப்ளிகேசன் மீது உரிய நடவடிக்கை எடுக்க CI முனுசாமி என்னிடம் பணம் ரூ.5000/– கேட்கிறார் என்றும், அதில் ரூ.2000/– அவருக்கும், ரூ.3000/– உங்களுக்கும் தனியாக கொடுக்கவேண்டும் என்றும் சொல்கிறார், என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது. நீங்கள்தான் எனக்கு உதவி செய்யவேண்டும் என்று கெஞ்சிக்கேட்டேன். அதற்கு அவர் நீ ஏற்கனவே வீட்டு சர்வீஸ் வாங்கியதற்கு எனக்கு தனியாக எந்த பணமும் தரவில்லை. அதனால் இந்த முறை அதற்காகவும், பூந்தோட்ட சர்வீஸ் கனெக்சன் கொடுக்க ஏற்பாடு செய்யவும், எனக்கு மட்டும் தனியாக ரூ.5000/– தாரவேண்டும். CI முனுசாமி அவருக்காக தனியாக கேட்ட பணத்தை பற்றி எனக்கு தெரியாது. எனக்கு மட்டும் தனியாக நீ ரூ.5000/– தர வேண்டும், இல்லையென்றால் உனது வேலையாகாது என்று அவரும் முடிவாக சொல்லிவிட்டார். மீண்டும் நான் CI முனுசாமியிடம் வந்து இது பற்றி சொன்னபோது என்னை நம்பாம போனயே, அதனால நீ எனக்கு தரவேண்டிய பணம் ரூ.2000/– த்தை எடுத்து கொண்டு வருகின்ற வெள்ளிக்கிழமை எனக்கு தனியாக கொடுத்துவிடு. AE மேடத்திற்கு கொடுக்க வேண்டிய பணத்தை நீயே அவருக்கு கொடுத்துவிடு என்று அவரும் முடிவாக

சொல்லிவிட்டார். என்னுடைய கஷ்டத்தை நான் எவ்வளவோ எடுத்து சொல்லியும் CI முனுசாமியும், AE அகல்யாவும் கொஞ்சம்கூட கருணை காட்டவில்லை. அவர்கள் இருவருக்கும் இலஞ்சமாக பணம் கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7,000/- ஐ என்னால் உடனடியாக ரெடிபண்ண முடியவில்லை. இன்றுதான் ஏற்பாடு செய்ய முடிந்தது. அதனால் அவர்கள் இருவரும் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் மொத்தம் ரூ.7,000/-த்துடன் இன்று இண்டூர் E.B ஆபிஸ் சென்று அவர்களை சந்திக்க உள்ளேன். ஆகவே என்னிடம் இலஞ்சமாக பணம் கேட்ட AE அகல்யா மற்றும் CI முனுசாமி ஆகியோர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். படித்து பார்த்தேன். நான் சொன்னபடி சரியாக உள்ளது.

[signature]
14/2/2020

Sir,

The oral statement of the informant was recorded by me in the office computer ~~and read~~ on 14.2.2020 between 06.00 hrs and 07.00 hrs and read it over to him which is admitted to be correct. Further, a confidential verification on the general reputation of the both accused and whether the informant has motive with them personally, was verified and found that the reputation of both accused are learnt to be not good and nothing adverse against the informant and the information given in his statement is genuine. Therefore, a case in Dharmapuri V & AC Cr.No 2/AC/2020 u/s 7 of the Prevention of Corruption Act 1988

as amended in 2018 (Central Act 16/2018)
was registered today 14.2.2020 at 08.30hrs
against both accused. The original F.I.R
and the statement of the informant ~~was~~
is sent to the Hon'ble court of Special
Judge/Chief Judicial Magistrate, Dharmapuri
and remaining copies are sent to
the officers concerned.

[signature] 14/2/2020

(G.V. KIRUSHNAA RAAJAN)
Dy. Supdt. of Police,
Krishnagiri V&AC,
FAC, Dharmapuri.